# அவசரக்கூட்டம்

கோயம்புத்தூர் மாவட்டம், கூடலூர் நகராட்சி அவசரக் கூட்டம் 22.05.2023 ஆம் நாள் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து பரிசீலித்து முடிவு செய்யப்படும். துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர மன்ற உறுப்பினர்களும் மேற்கண்ட அவசரக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**முன்னிலை :–**

1. திரு.அ.அறிவரசு அவர்கள், தலைவர், கூடலூர் நகராட்சி
2. திரு.கி.பால்ராஜ் அவர்கள், ஆணையாளர்(கூ.பொ), கூடலூர் நகராட்சி

**பொருள் எண்:01**

கூடலூர் நகராட்சியானது 29.98 ச.கி.மீ கொண்டு, 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 38859 மக்கள் தொகையும், தற்போது 58842 மக்கள்தொகையும் கொண்டு 27 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் 15000 குடியிருப்பு வீடுகளும், 643 வணிகம் மற்றும் தொழில் நிறுவனங்களும், 12447 குடிநீர்க்குழாய் இணைப்புகளும் உள்ளன. கூடலூர் நகராட்சிக்கு தற்போது பில்லூர் குடிநீர் திட்டம் அமுல்படுத்தப்பட்டு, நாளொன்றுக்கு 5.5 MLD வீதம் அனைத்து பகுதிகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீரானது போதுமானதாக இல்லாததால், ஏற்படும் பற்றாக்குறையை சரிசெய்ய, கூடுதலாக 5.00 MLD தேவைப்படுவதால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:02**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் சீரான குடிநீர் விநியோகம் செய்ய, நகராட்சியிலுள்ள அனைத்து வீடுகள் மற்றும் குடிநீர்க்குழாய்களை சர்வே செய்து திட்ட அறிக்கை தயார்செய்ய, முனைவர்.ஜி.மூர்த்தி என்பவருக்கு பணி ஆணை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:03**

கூடலூர் பேரூராட்சியானது அரசாணை எண்.166, நாள்.07.12.2021ன் படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது இந்நகராட்சியில் 149.77 கி.மீ நீளத்தில் சாலைகள் உள்ளது. மேற்படி, நகராட்சிக்குட்பட்ட சாலைகளை அளந்து சாலை பதிவேடு தயாரிக்கவும், UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்யவும் திரு.மணிகண்டன், திண்டுக்கல் என்பவருக்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:04**

கூடலூர் நகராட்சியில் தற்போதுள்ள சாலைப்பதிவேட்டில் வார்டு எண். 9 மற்றும் வார்டு எண்.10 ஆகியவற்றில் தவறுதலாக Lane மற்றும் Street என பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதை Road ஆக மாற்றம் செய்து, சாலைப்பதிவேட்டில் திருத்தம் செய்து பதிவேற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்ற தலைவர்**
**கூடலூர் நகராட்சி**
**கோயம்புத்தூர்–47**

**22.05.2023 அன்று நடைபெற்ற நகரமன்ற அவசரக் கூட்டத்தின் தீர்மானங்கள்**

| **பொருள் எண்** | **தீர்மான எண்** | **தீர்மானம்** |
|---|---|---|
| 1 முதல் 4 முடிய | 235, 236, 237, 238 | மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது. |

ஒ.ம்/ திரு.அ.அறிவரசு,
தலைவர்
கூடலூர் நகர்மன்றம்
கோயம்புத்தூர்.

**//உண்மை நகல் //**

27/11/2023

ஆணையாளர்(கூ.பொ)
கூடலூர் நகராட்சி
கோயம்புத்தூர்–47

21.11.2023